# மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்ட நீதிமன்ற வளாகம்
# திருப்பூர்
# சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு
### ( Notification of Para Legal Volunteers)

திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இயங்கும் பல்லடம், அவினாசி, உடுமலைப்பேட்டை, காங்கேயம்,தாராபுரம் வட்ட சட்டப் பணிகள் குழுக்களுக்கு சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை பாமர மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக, சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers) தேர்ந்தடுக்கப்பட உள்ளார்கள்.

திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்க்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஆசிரியர்கள் ( ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் முத்தகுடிமக்கள்
3. M.S.W பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள் (Doctors)
6. சட்ட கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை)
7. சமூக சேவை புரியும் சமூக ஆர்வலர்கள்( அரசியல் கட்சி சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள்)
8. மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள்
9. திருநங்கைகள்

மேற்கண்ட பிரிவினர்களில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக (Para Legal Volunteers) பணி புரிய விரும்பம் உள்ள நபர்கள் விண்ணப்பங்களை தங்களது குடியிருப்பிற்கு அருகாமையில் உள்ள நீதிமன்றங்களில் இயங்கி வரும் சட்டப் பணிகள் ஆணைக்குழு அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கீழ்க்காணும் இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு 28.07.2017 வந்து சேருமாறு நேரில்லோ தபால் மூலமாகவோ அனுப்பவேண்டும். மேற்படி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு

ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பெறப்பட்ட விண்ணப்பங்களை எவ்வித காரணமின்றி ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு. தேர்ந்தடுக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்கள் பணி நிரந்தரம் செய்ய உரிமைகோர முடியாது.

| வ.எண் | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு ( DLSA) / வட்ட சட்டப் பணிகள் குழு (TLSC) | தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு | 50 |
| 2 | பல்லடம் | 25 |
| 3 | தாராபுரம் | 25 |
| 4 | உடுமலைப்பேட்டை | 25 |
| 5 | அவினாசி | 25 |
| 6 | காங்கேயம் | 25 |

**குறிப்பு:**

மேற்படி பணிக்கு சம்பளம் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.வேலை செய்த நாட்களுக்கு மட்டும் மதிப்பு ஊதியம் ரூ. 250 / - வழங்கப்படும். விண்ணப்பதார்கள் சேவை மனப்பான்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு மற்றும் பல்லடம் ,அவினாசி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் , காங்கேயம் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுக்களை அனுகவும். மேலும் நேர்க்காணல் நடைபெறும் நாள் மற்றும் தேர்ந்தெடுக்கும் நபர்களின் விவரங்கள் (ecourts.gov.in/tn/tiruppur) என்ற இணையதளத்தை பார்த்து தெரிந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஓம்./ அலமேலு நடராஜன்,
தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
திருப்பூர்

# திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

DISTRICT LEGAL SERVICES AUTHORITY, TIRUPPUR

## சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை விண்ணப்பம்

(Application for Para Legal Volunteers)

Passport Size photo to be Affixed

1. பெயர் (பெரிய எழுத்துக்களில்)
   Name (in Capital Letter) :
2. தகப்பனார் / கணவர் பெயர்
   Father's / Husband's Name :
3. வயது /Age :
4. பாலினம் / Sex : ஆண்/பெண் / திருநங்கை (Male / Female / Transgender)
5. ஜாதி மற்றும் பிரிவு
   Community / Caste :
6. மதம் / Religion :
7. கல்வி தகுதிகள் :
8. தொழில் சார்ந்த கல்வித் தகுதிகள்
   Technical Qualification:
9. விலாசம் / Address : அலுவலகம் / Office

   : வசிப்பிடம் / Residence
10. தொழில் / Occupation :
11. கைபேசி எண் / Mobile Number :
12. மின்னஞ்சல் முகவரி
    E- Mail Address

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையென உறுதி அளிக்கின்றேன். மேலும் வயது ,கல்வி, தொழில் மற்றும் முகவரி சான்றிதழ்களின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன்.

கையொப்பம்(signature)